ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் உட்பட அனைவருக்கும் மத்திய அரசாங்கத்தினுடைய விதிமுறைகளுக்கேற்ப இங்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் ஊதியத்தை அதிகரித்து அறிவித்தமைக்காக மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. கே. கோபிநாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தைப்போல மாநில அரசாங்கமும் 7 சதவிகித அகவிலைப்படி கொடுத்ததற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆசிரியர் பெருமக்கள், அரசுப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கக்கூடிய 7 சதவிகித அகவிலைப் படியை தமிழக அரசும் 1–1–2012 ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்து, அதுவும் 1,383.49 கோடி ரூபாய் அளவிற்கு ரொக்கமாக வழங்கப்படும் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய இந்த அறிவிப்பை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.*

3. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*